குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண். 18/2011

அ.சா. 1

2024–ம் ஆண்டு ஜனவரி 09 –ம் தேதி செவ்வாய்கிழமை அரசு தரப்பு சாட்சி –01 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.செல்வி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | காளியப்பன் | ஜாதி | |
| தந்தை பெயர் | ராமசாமி | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 1.02 மணி,

Accused A2.Murugan, A3. Chandrasekar present. A1.Nallusamy absent. Petition u/s 317 Cr.P.C filed and allowed. . Advocate Mr. Siddharth shankar present for accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரனை:**

1. நான் தற்போது காமலாபுரம் பிரிவில் குடியிருந்து கொண்டு லோடு லாரிகளுக்கு கயிறு கட்டும் வேலை செய்து வருகிறேன். நான் கடந்த 13 வருடங்களாக கயிறு கட்டும் தொழில் செய்யவில்லை வேறு வேலை பார்க்கிறேன். இவ்வழக்கு சம்பந்தமாக எதுவும் எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக போலீஸார் என்னை விசாரிக்க வில்லை.

**( அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கேட்டதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில்**

**குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

2. போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அந்த விசாரணையில் கடந்த 01.12.2010 ம் தேதி மதியம் 03.30 மணியளவில் ஆர்.சி.செட்டிப்பட்டி பிரிவு ரோட்டில் நான் வழக்கமாக கயிறு கட்டும் இடத்தில் இருக்கும் போது சுமார் 35 வயது மதிக்கத்தக்க ஒருவரும் சுமார் 25 வயது மதிக்கத்தக்க ஒருவரும் வந்து எங்களிடம் இந்த பக்கம் லோடு வண்டி ஏதாவது போனதை பார்த்தீர்களா என்றும் கேட்டார்களா என்றும் நாங்கள் வண்டி எதுவும் போகவில்லை என்று சொன்னதாகவும், அன்றைய தினம் 05.45 மணியளவில் காவல் ஆய்வாளர் வந்து எங்களிடம் அன்றைய தினம் மதியம் சுமார் 03.00 மணியளவில் நூல் கோண்கள் லோடு ஏற்றிய TN 40 A 2079 என்ற பதிவெண் உடைய லாரி இந்த இடத்தில் நின்று கொண்டிருந்ததை பார்த்தீர்களா என்று கேட்டதாகவும் அதற்கு நாங்கள் காலையில் இருந்து இந்த இடத்தில் இருக்கிறோம் மேற் சொன்ன லாரி எதுவும் இங்கு வந்து நிற்கவில்லை என்று சொன்னதாகவும் மேற்கண்ட சங்கதிகளை போலீஸார் விசாரணையின் போது கூறிவிட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரனை:**

3. இல்லை.

**மறு விசாரணை : இல்லை**

விசாரணை முடிந்த நேரம்: மதியம் 1.11 மணி,

ஒம்/—எஸ்.ஷர்மிளா,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.